# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

## C. C. No. 81-2025

| L.W.6 P.W.8 | | |
|---|---|---|
| Name: | சித்ரா | Caste: |
| Husband's Name: | நடராஜன் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:40/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.06.2026
(எதிரி ஆஜர்.)

**முன் விசாரணை:**

நான் தற்போது அகஸ்தியன்பள்ளி, பூவன்தோப்பில் குடியிருந்து உப்பளத்தில் வேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. **என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2-வது கையொப்பம் என்னுடையதாகும். கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.4-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி கையொப்பத்தை எனது வீட்டின் அருகில் வைத்து போட்டுக் கொடுத்தேன். மேற்படி கையொப்பத்தை எப்போது செய்தேன் என்று தேதி, மாதம், வருடம் எனக்கு நினைவில்லை. எனது வீட்டிற்கு எதிர் திசையில் தான் ஆஜர் எதிரியின் வீடு உள்ளது. தகராறு சம்பந்தமாக என்னிடம் போலிசார் விசாரித்தார்கள். தகராறு பற்றி எனக்கு தெரியாது என்று கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்குத் தெரியாது. மேற்படி தாளானது எழுதியிருந்ததா அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருந்ததா என்றால், அதை பற்றி எனக்குத் தெரியாது. போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால், சரி. பொய் வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 30.06.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**